**Tiaano®**
Innovation In Inert Metals

# Ti Anode Fabricators Pvt. Ltd.

#48 Noothancharv. Madambakkam. Chennai – 126. India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

**"கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"**

## GOAL 2014-2015

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 6.25% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers…**
  - Up to Jun. 14 : 769 Nos.
  - Up to May 14 : 767 Nos.
- **Performance Jun. 14 …**
  - Turnover growth : 2.08%
  - Employment growth : - 3.07%
  - 100% Attendance : 12.88%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika Jeyakummar

## OUR FORMULATIONS

- Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments
- Aquafil – Water Disinfection Equipments.
- Fib Tec Composite – FRP/ GRP Mandrels & Tanks
- HydroGen Go Green – HHO Generators
- Titanictrade (We Deliver Value Chain) – Portal for Exotic Metals
- – Tiaano Vidyashrm (CBSE Pattern School)




## மூங்கில் மரம்!

பார்க்கும் இடமெல்லாம் பச்சை பசேலென கண்ணைக் கவரும்படியாக இருந்தது, பியூலாவின் தோட்டம்! மாலை மயங்கும் நேரம்! குளிர்ந்த தென்றல் மெதுவாய் வீசிக்கொண்டிருக்க, அதற்கு ஏற்றார் போல் ஓங்கி வளர்ந்த மரங்களெல்லாம் அசைந்தாடிக் கொண்டிருந்தது. தோட்டத்தின் எழிலை ரசித்தபடி நடந்து வந்து கொண்டிருந்தார் தோட்டத்தின் எஜமானர். கண்ணுக்கு குளிர்ச்சியான பசுமையையும், இதமான தென்றல் காற்றையும் அனுபவித்தபடி வந்த எஜமானரின் கண்கள், தோட்டத்தில் உள்ள எல்லா செடிகளைக் காட்டிலும் மிகவும் அழகாகவும், வாட்ட சாட்டமாகவும், கம்பீரமாகவும் உயர்ந்து நின்ற மூங்கில் மரத்தைக் கண்டதும் ஆச்சரியத்தால் அகல விரிந்தது. திரும்ப திரும்ப ஆசையாய் பார்க்கும்படியாக மிகவும் அழகாக வளர்ந்திருந்தது மூங்கில் மரம். வருடங்கள் கடந்தன! ஒவ்வொரு முறை தோட்டத்திற்கு எஜமான் வரும்போதும், ஆரவாரத்தோடு வீசும் காற்றுக்கு மூங்கில் வேகமாக அசைந்தாடும். இம்முறை எஜமான் மூங்கிலிடம் நான் உன்னை பயன்படுத்த விரும்புகிறேன் என்றார். எஜமானின் வார்த்தைகளைக் கேட்டதும் மூங்கில் தன் தலையை ஆகாயத்திற்கு நேராக நிமிர்த்தி மகிழ்ந்தது.

நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த மூங்கில் தன் எஜமானை நோக்கி மிகுந்த சந்தோஷத்தோடு, "எஜமானரே நான் தயாராக இருக்கிறேன். உங்கள் விருப்பம் போல் என்னை பயன்படுத்துங்கள்" என்றது. உடனே எஜமானர் தான் நேசித்த மூங்கிலைப் பார்த்து ஓங்கிய குரலுடன், மூங்கிலே நான் உன்னை வெட்டப் போகிறேன். இதைசற்றும் எதிர்பார்க்காத மூங்கில் பயங்கர அதிர்ச்சியுடன், 'என்னையா வெட்டப்போகிறீர்கள்? நீங்கள் என்னை நேசிக்கிற, என் அழகை நித்தமும் ரசிக்கிற எஜமானர் அல்லவா! தயவு செய்து என்னை வெட்ட வேண்டாம். என்னை உங்கள் சந்தோசத்துக்காகவும், உங்கள் புகழுக்காகவும் பயன்படுத்துங்கள்' என்று கெஞ்சுகிற குரலில் கேட்டது. அதற்கு எஜமான் பரிவோடு, 'அன்பாக மூங்கிலே, உன்னை வெட்டவில்லையென்றால் என்னால் உன்னை பயன்படுத்த முடியாது' என்றபடி அங்கிருந்து நகர்ந்தார். அதுவரை தென்றல் காற்றுக்கு இசைவாய் ஆடிப்பாடி மகிழ்ந்த மூங்கில், சோகத்தோடு என்ன சொல்வதென்று தெரியாமல் இரவு முழுவதும் அமைதியாய் ஆழ்ந்த யோசனையில் இருந்தது. மறுநாள் பொழுது விடிந்தது. எஜமானின் காலடி சத்தம் கேட்ட மூங்கில், தன் பெருமைகளையும் உயர்வுகளையும் விட்டுவிட்டு தன்னை தாழ்த்தி மெதுவாக எஜமானரே, நீங்கள் என்னை வெட்டாமல் பயன்படுத்த முடியாது என்றால், என்னை உங்கள் விருப்பம் போல் வெட்டி பயன்படுத்துங்கள் என்றது. உடனே எஜமானர் மூங்கிலே, உன் இலைகளையும் கிளைகளையும் வெட்டி பிரித்தெடுப்பதோடுகூட உன்னையும் நான் இரண்டாக பிளக்க வேண்டும் இல்லையென்றால் என்னால் உன்னை பயன்படுத்த முடியாது என்றார்.

சூரியன் மறைகிற அந்திவேளை! மிகவும் உடைந்துபோன குரலுடனும்,

## FUNCTIONAL WISHES





**Independence Day**
**15th AUGUST**

**Vinayagar Chaturthi**
**29th AUGUST**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel: 22294565 |
| | : M/s. Jeya Clinic |
| | Tel: 098408 73107 |

## BIRTH DAY WISHES

*எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!*
*அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!*



**Mr. P. Suresh Baskar** **13th Aug.**
Facilitation

**Mr. M. Sasi Kumar** **15th Aug.**
Production

**Miss. P. E. Nancy** **19th Aug.**
Director – Admin

**Mr. M. Vinodh kumar** **22nd Aug.**
Coating

**Best Wishes from Tiaano Employees**

## Congratulations



**Mr. S. SABABATHI**
**Manager – SAP**

We are very glad to welcome you to our Tiaano family as a Manager - SAP

பயங்கலந்த எதிர்பார்ப்புடனும் மூங்கில் தன் எஜமானரை நோக்கி மெதுவாக 'எஜமானரே, என்னை வெட்டி பிளந்தெடுத்து பயன்படுத்திக் கொள்ளுங்கள்' என்றது. எஜமானரும் தன் வேலையை ஆரம்பித்தார். தான் நேசித்த மூங்கிலை வெட்டினார். இரண்டாக பிளந்தார். கிளைகளையும் இலைகளையும் தனியாக பிரித்தெடுத்தார். மூங்கிலின் ஒருசில பகுதிகளை வெட்டி, செதுக்கி சரி செய்தார். இறுதியாக இரண்டாக பிளக்கப்பட்ட மூங்கில் மரத்தை எஜமான் தோளில் சுமந்து கொண்டு, தன்னுடைய வறண்ட நிலத்தின் எதிரே உள்ள தெளிந்த நீரூற்றுக்கு கொண்டு சென்றார். உடைக்கப்பட்ட மூங்கிலின் ஒரு பகுதியை நீரில் வைத்தார். அதன் அடுத்த பகுதியை தன்னுடைய வயலில் வைத்தார். அவர் நேசிக்கிற மூங்கில் தண்ணீரை கடத்துகிற கால்வாயாக பயன்பட்டது. பிரகாசிக்கிற நீரின் தண்ணீர் பிளக்கப்பட்ட மூங்கிலின் உடல் வழியாக காத்துக் கொண்டிருந்த வறண்ட நிலத்தை வந்தடைந்தது. அந்த நிலத்தில் நெல் பயிரிடப்பட்டது. நாட்கள் ஆனதும் நெற்கதிர்கள் அதிலிருந்து வெளிவந்து, அறுவடைக்கு தயாரானது. முன்பு தன்னுடைய அழகினால் மகிமையாய் நின்று கொண்டிருந்த மூங்கில், உடைக்கப்பட்ட தாழ்மையான நிலையிலோ இன்று அதிக மகிமையாய் மெருகேறி நின்று கொண்டிருந்தது. தோட்டத்தில் மரமாய் நின்று கொண்டிருந்தபோது அழகை வெளிகாட்டிய மூங்கில், உடைக்கப்பட்ட நிலையிலோ 'கடத்தும் வாய்க்காலாய்' தன் எஜமானின் தோட்டத்தில் பயன்பட்டது.

Compiled By : Ms. P.E. Nancy
Director – Admin

### கான்ஃபிடன்ஸ் கார்னர்

ஒரு முனிவர், கையில் ஒரு பையோடு மலையேறிக் கொண்டிருந்தார். மூச்சு வாங்கியது. திரும்பிப் பார்த்தால் பன்னிரெண்டு வயது சிறுமி ஒருத்தி, தன் மூன்று வயது தம்பியைத் தூக்கிக்கொண்டு மிக அனாயசமாக மலையேறிக் கொண்டிருந்தாள்.

முனிவர் கேட்டார், "மகளே! என்னால் இந்தப் பையை சுமந்து கொண்டு ஏறவே முடியவில்லை. உனக்கு சிரமமாக இல்லையா?"

அவள் சொன்னாள், "ஐயா! நீங்கள் ஒரு சுமையைத் தூக்கிக் கொண்டிருக்கிறீர்கள். நான் என் தம்பியைத் தூக்கிக் கொண்டிருக்கிறேன்".

அன்பு எதையும் சுமக்குமென்று அறிந்தார் முனிவர்.

–கான்ஃபிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

### எதில் மகிழ்ச்சி!!!

ஒரு பெரிய ஹாலில் செமினார் நடந்து கொண்டிருந்தது. அப்போது பேச்சாளர் எல்லார் கையிலும் ஒரு பலூனை கொடுத்து தங்கள் பெயரை எழுதச் சொன்னார்.

எல்லோரும் தங்கள் பெயரை பலூனில் எழுதி முடித்தவுடன், அதை இன்னொரு அறையில் நிரப்ப சொன்னார். இப்பொழுது அந்த பேச்சாளர், உங்கள் பெயர் எழுதிய பலூனை அந்த அறைக்குள் எடுத்து வாருங்கள் என்று அறிவித்தார். உடனடியாக அனைவரும் விழுந்து

## தெரிந்து கொள்வோம்

### பலன் தரும் இயற்கை மருத்துவ குறிப்புகள்...

* சுக்கு, மிளகு, திப்பிலி சம அளவு எடுத்து வறுத்து பொடி செய்து தேனில் கலந்து சாப்பிட்டால் தொண்டை கரகரப்பு குணமாகும்.
* உப்பு நீரை வாயில் வைத்து தொண்டை வரை படும்படி வாய் கொப்பளித்து வந்தால் தொண்டை வலி குணமாகும்.
* குடல்புண் குணமாகவும், வயிற்றுப் புழுக்கள் அழியவும் அகத்திக் கீரை நல்ல உணவு.
* எலுமிச்சை பழத்தின் சாறை ஓரிரு துளிகள் காதில் விட காது வலி தீரும்.
* தேனில் ஊறவைத்த நெல்லிக்காயை தினமும் சாப்பிட்டு வந்தால் நரம்பு தளர்ச்சி சரியாகும்.
* முற்றிய வெண்டைக்காயை சூப் செய்து குடித்து வந்தால் இருமல் உடனே நிற்கும்.
* ஐந்தாறு துளசி இலைகளும் ஒரு சிறு துண்டு சுக்கு, 2 இலவங்கம் சேர்த்து நன்கு அரைத்து நெற்றியில் பற்றாகப் போட்டால் தலைவலி குணமாகும்.
* வெள்ளை நந்தியாவட்டைப் பூவை எடுத்து கண்களில் மேல் வைத்து அடிக்கடி ஒற்றிக்கொண்டே இருந்தால் கண்களில் ஏற்படும் உஷ்ணம் குறையும்.
* அருகம்புல்லைச் சாறாகவோ அல்லது பொடியாகவோ வாரம் ஒருமுறை சேர்த்துக் கொண்டால் இரத்தம் சுத்தமாவுடன் உடல் உஷ்ணமும் தணியும்.

Collected from Internet

## Attitude

All birds find shelter during rain. But Eagle avoids rain by flying above clouds.

Problems are common, but attitude makes the difference.

Compiled By : M. Siva Kumar
Marketing(Fib Tec)

அடித்து அந்த அறைக்குள் ஓடிச்சென்று ஒவ்வொரு பலூனாக எடுத்து தேடினர்.

ஒருவருக்கொருவர் நெருக்கி தள்ளிக்கொண்டு கீழே விழுந்து தங்கள் பெயருக்குரிய பலூன் கிடைக்கிறதா என்று பரபரப்பாக தேடினர். 5 நிமிடம் கடந்த போதிலும் ஒருவராலும் தங்களுக்குரிய பலூனை தேடி கண்டு பிடிக்க முடியவில்லை.

இப்பொழுது அந்த பேச்சாளர் சொன்னார், ‘ஒவ்வொருவரும் ஒரு பலூன் மட்டும் எடுங்கள். அந்த பலூனில் யார் பெயர் இருக்கிறதோ அதை அந்த பெயர் உடைய நபரிடம் கொடுங்கள்’ என்றார். அடுத்த ஒரே நிமிடத்தில் தங்கள் பெயர் எழுதப்பட்ட பலூன் எல்லோருக்கும் கிடைத்துவிட்டது.

இப்பொழுது அந்த பேச்சாளர் சொன்னார், ‘இது தான் வாழ்க்கை’ எல்லோரும் மகிழ்ச்சியை தேடுகிறோம், ஆனால் அது எங்கே எப்படி எதில் கிடைக்கும் என்று நினைப்பது இல்லை’. ‘நம்முடைய சந்தோஷம் அடுத்தவர்களுக்கு உதவுவதில் தான் இருக்கிறது. அடுத்தவர்களுக்கு மகிழ்ச்சியை கொடுங்கள், உங்கள் மகிழ்ச்சி உங்களை தேடி வரும்’.

Compiled By : Mrs. S. Sahayapani Shiny
Marketing

## நம்பித்தான் ஆகவேண்டும்
## 5S (தொடர்ச்சி XXXI)

### ஜிட்

இப்படி யோசித்த சில தொழில் நிறுவனங்கள், ‘செய்ரி’ தத்துவத்தின்படி, பயனில்லாத இந்தப் பொருள்களை அதாவது சேமிப்புக் கிடங்குகளை அகற்றிவிடலாம் என்று முடிவெடுத்தார்கள்.

சேமிப்புக் கிடங்குகளை அகற்றிவிடுவதா? இதென்ன கலாட்டா? மூலப்பொருள்கள் இல்லாமல் உற்பத்தி எப்படி நடக்கும்?

அதிர்ச்சியடைய வேண்டாம், மூலப்பொருள்களை அகற்றப்போவதாக யார் சொன்னார்கள்? விலை உயர்ந்த அந்த பொருள்களை அநாவசியமாக வாங்கி, சேமித்து வைக்கும் பழக்கத்தைதான் அகற்றப்போகிறோம், மற்றபடி,

மூலப்பொருள்கள் சரியான நேரத்தில் (**Just In Time**) வந்து சேரும், இதுதான் **JIT.**

அதாவது பொருள்களை முன்கூட்டியே காசு கொடுத்து வாங்கிச் சேமித்துவைக்கிற அவசியம் இல்லை. இந்தத் தேதிக்கு எங்களுக்கு இவ்வளவு மூலப்பொருள்கள் தேவை என்று தெளிவாகச் சொல்லிவிட்டால், அந்த நேரத்தில் பொருள்கள் வந்து சேரும். அதற்கு மட்டும் பணம் கொடுத்து வாங்கிக்கொண்டால் போதும்.

தொழிற்சாலையின் இயக்கத்திற்கு அத்தியாவசியமானது என்று எல்லாரும் நினைத்துக் கொண்டிருந்த சேமிப்புக் கிடங்குகளையே, பயனற்றவை என்று நீக்கி விட முடிகிறது என்றால், நம்முடைய தினசரி வாழ்க்கையில் இப்படி எத்தனை முன்னேற்றங்களைச் செய்ய முடியும் என்று யோசித்துப் பாருங்கள்.

இதற்கு ஒரு சின்ன உதாரணமாக, நம் வீடுகளில் மளிகைச் சாமான்கள் வாங்குகிற முறையையே ஆராயலாம். ஐந்து கிலோ அரிசி வாங்குகிற இடத்தில், விலை மலிவாக கிடைக்கிறது என்று இருபது கிலோ வாங்கி

## கவிதைகள்

### வெற்றி தான் இலக்கு

அப்போது தான் நீ
கவனிக்கப்படுவாய் –அதற்கு
உன் சிந்தனைகளைப் புதியதாக்கு,
உன்பாதைகளைத் தனியானதாக்கு,
உன் அணுகுமுறையை வேறானதாக்கு,
உன் பார்வையை மாறுபட்டதாக்கு,
உன் வழிமுறையை வித்தியாசமானதாக்கு
மாற்றங்களை கொண்டு வா!
நீ கவனிக்கப்படும் போது தான்
கவனிக்கப்படுதலின் ரகசியம் தெரியும்

Compiled By : M. Sudha
Fib Tec

### நீர்

வாடிய பயிர்களின்
வாட்டத்தை போக்குகிறது…
நாவறண்டு தவிப்பவர்களின்
தாகத்தை தீர்க்கிறது…
ஆனந்தத்தை விரும்புவர்கள் மீது
அருவியாக விழுகிறது…
மொத்தத்தில்
பூமியில் உயிர்கள் வாழ
தன்னையே உயிராக தருகிறது…
ஆனால்
நீர்(நீ) என்ன செய்தாய்
என்று நினைத்துப்பார்…

Compiled By : Mrs. C. Bavani
Administration

## சிந்தனைக்கு

தோல்வி என்று ஒன்று
இல்லவே இல்லை!
அனுபவத்தின் மறு பெயரை தான்
தோல்வி என்று சொல்கிறார்கள்!
அதனால் வெற்றியை
பெற்று கொள்!
தோல்வியை கற்றுக் கொள்!

Compiled By : Mrs. R. Jayanthi
Purchase

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

வைத்தால், என்ன ஆகும்?

1. இருபது கிலோவுக்கு முன் கூட்டியே பணம் கொடுத்து விடுவதால், கையில் பணம் இருப்பு குறையும்.
2. அந்த அரிசி மூட்டை வீட்டில் அநாவசியமாக இடத்தை அடைத்துக் கொண்டிருக்கும்.
3. ஒழுங்கான முறையில் பராமரிக்காமல் இருந்தால் அரிசியில் பூச்சி, புழுக்கள் வந்து வீணாகும்.

இதுபோல், நாம் வாங்கி சேமிக்கிற ஒவ்வொரு விஷயத்தையும் ஆராயவேண்டும். பயன்படக்கூடிய விஷயங்களைத்தான் நமது வீட்டில் அல்லது பணியிடத்தில் வைக்கவேண்டும். வருங்காலத்தில் பயன்படலாம் என்கிற விஷயங்களை, அந்த வருங்காலம் வரும் வரை தள்ளிப்போடலாம், தப்பே இல்லை.

5S –ன் இரண்டாம் படியான, செய்டனுக்குச் செல்லுமுன் ‘செய்ரி’யின் விதிமுறைகள் அனைத்தையும் சுருக்கமாக இன்னொருமுறை பார்த்துவிடலாம்.

1. பொருள்களை –தேவையானவை, தேவையற்றவை என்று பிரியுங்கள்.
2. தேவையானவற்றையும் –அடிக்கடிப் பயன்படுபவை, எப்போதாவது பயன்படுபவை என்று பிரிக்கலாம்.
3. அடிக்கடிப் பயன்படுகிற, அவசியமான பொருள்கள் மட்டும் தான் நமது பணியிடத்தில் இருக்கவேண்டும்.
4. மற்றவை அனைத்தும், வேறு இடங்களில் சேமிக்கப்படவேண்டும் அல்லது நீக்கப்பட வேண்டும்.
5. எதற்காவது பயன்படலாம் என்ற அசட்டு நம்பிக்கையில் முற்றிலும் அவசியமற்றவைத் தூக்கி எறிய, தயங்கவே கூடாது. கடுமையான விமர்சனப் பார்வை அவசியம்.
6. ‘செய்ரி’யைச் செயல் படுத்துவது எல்லாருடைய பொறுப்பு.
7. இதே விதிகளை –நமது தினசரி நடவடிக்கைகள், வழிமுறைகளை அலசி ஆராய்ந்து மேம்படுத்துவதற்கும் பயன்படுத்தலாம்!

தொடரும்…

## CHLORINATOR – TITANIUM CELL

